தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்

சென்னை–600 015.

ந.க.எண். 29882/2017/பொது 2.4 நாள்:15.05.2017

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் காலியாக உள்ள 2 ஈப்பு ஓட்டுநர் காலிப் பணியிடம் இனச் சுழற்சி அடிப்படையில் நேரடி நியமனத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்பட உள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | ஊதிய விபரம் | கல்வித் தகுதி | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | ஈப்பு ஓட்டுநர் | 5200–20200+2400 தர ஊ தியம் | 8–ம் வகுப்பு தேர்ச்சி | 2 |

இந்த பணியிடம் 1) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் முன்னுரிமை அற்றவர் 2) பிற்படுத்தப்பட்டோர் முன்னுரிமை அற்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வயது வரம்பு மற்றும் தகுதிகள்:**

1. 01.05.2017 அன்று

| வ.எண். | பிரிவு | குறைந்த பட்ச வயதுவரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | பிற்படுத்தப்பட்டோர் | 18 | 32 |
| 2 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 18 | 32 |

2. 1988 மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

3. வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் உள்ளவாறு வெள்ளைத் தாளில் தெளிவாக குறிப்பிட்டு எழுதி அனுப்ப வேண்டும்.

2. இதற்கென விண்ணப்ப படிவம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

3. பிறப்புச் சான்று நகல், கல்விச் சான்று நகல், சாதிச் சான்று நகல், ஓட்டுநர் உரிமச் சான்று நகல் மற்றும் அனுபவச் சான்று நகல் ஆகியவற்றினை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டும்.

4. விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் 31.05.2017 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், 4வது தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–15 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கப்பெற வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ளவாறு விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. தாமதமாக காலக் கெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

6. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

7. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

இயக்குநர்

ஊர்தி ஓட்டுநர் பணியிடத்திற்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

புகைப்படம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் | : | |
| 2 | தந்தை பெயர் | : | |
| 3 | பிறந்த தேதி/வயது | : | |
| 4 | கல்வித்தகுதி | : | |
| 5 | ஓட்டுநர் உரிமம் எண்/அனுபவம் | : | |
| 6 | முகவரி | : | |
| 7 | தொலைபேசி மற்றும் கைபேசி எண் | : | |
| 8 | வகுப்பு/இனம்/உட்பிரிவு | : | பிற்படுத்தப்பட்டோர்/<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் |

"விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டியவரை உண்மை. தேர்விற்கு முன்போ அல்லது பிறகோ இவ்விபரங்கள் தவறு என அறியவரும் பட்சத்தில் என்மீது தேர்வுக்குழு எடுக்கும் எவ்வித நடவடிக்கைக்கும் உட்படுகிறேன். மேலும் போட்டித் தேர்வுக்கு தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளேன் என உறுதி கூறுகிறேன்"

இணைப்பு – 1) பிறப்புச் சான்று நகல்
2) சாதிச் சான்று நகல்
3) கல்வித் தகுதிச் சான்று நகல்
4) ஓட்டுநர் உரிமச் சான்று நகல்
5) அனுபவச் சான்று நகல்

கையொப்பம்